Dhinathdhalam@gmail.com
www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234
சட்டமன்ற தொகுதிகளுக்கும்
செய்தி – விளம்பரம்
சேகரிக்க முழு நேர – பகுதி நேர
பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556
நடுநிலை நாளிதழ்
ISO : 9001:2015; QT-57977/1125

DHINATH DHALAM Tamil & English daily Paper

**செய்தியாளர்கள் தேவை**



தமிழகம் முழுவதும்
மாவட்டம் & தாலுகா
வாரியாக சந்தாதாரர்
அடிப்படையில்
ஆண்/பெண்
நிருபர்கள் தேவை

☎ 94440 82959

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,
ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 95 | வியாழக்கிழமை Thursday | 05.02.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# இளைஞர்களின் கனவே தமிழகத்தின் எதிர்காலம்

## என் கனவு என் எதிர்காலம் புதிய இணையதளத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்தொடங்கி வைத்தார்




இளைஞர்கள் தங்கள் கருத்துகளை பதிவுசெய்ய இளைஞர் கனவு தளத்தைத் தொடங்கி வைத்தார் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர். விழுப்புரம் மாவட்டத்தில் ரூ.254.29 கோடி மதிப்பிலான 29 திட்டங்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார். இதைத்தொடர்ந்து இளைஞர்களின் கனவுகளை பதிவு செய்யும் 'என் கனவு என் எதிர்காலம்' திட்டத்தை அவர் தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு அரசு பொதுமக்களின் கனவுகளை நேரடியாக கேட்டு அவற்றின் அடிப்படையில் திட்டங்களை செயல்படுத்தும் நோக்குடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஜனவரி 9 அன்று 'உங்ககனவுசொல்லுங்க' என்ற திட்டத்தை தொடங்கிவைத்தார். இந்தத்திட்டத்தின்மூலம் தமிழ்நாடு முழுவதும் உள்ள 1.91 கோடி குடும்பங்களை நேரடியாகச் சந்தித்து அவர்களின் கனவுகளை நிறைவேற்றும் வகையில் கருத்துகள் சேகரிக்கப்பட்டு வருகிறது.

இந்த முயற்சியின் சிறப்பு விரிவாக்கமாக இளைஞர்களின் கனவுகள் மற்றும் எதிர்கால இலக்குகளை நேரடியாகப்பதிவுசெய்துஅவற்றை கொள்கை உருவாக்கத்தில் இணைக்கும் நோக்குடன் 'என் கனவு, என் எதிர்காலம்' திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

இதன் ஒரு பகுதியாக, 18 முதல் 29 வயது வரையிலான இளைஞர்களிடமிருந்து கருத்துகளைப் பெற Youth Dream Portal (இளைஞர் கனவு தளம்) தொடங்கப்பட்டுள்ளது. இந்த தளம் 20 நாட்கள் செயல்பாட்டில் இருக்கும். இளைஞர்கள் QR கோடு அல்லது இணைய இணைப்பு மூலம், தங்களின் உடனடி தேவைகள் மற்றும் எதிர்கால கனவுகள் / இலக்குகள் குறித்து இந்தத் தளத்தில் பதிவு செய்யலாம். இவை 2030-ஐ நோக்கிய கொள்கை திட்டமிடலுக்கு அடிப்படையாக அமையும்.

இந்த தளம் மூலம் கொள்கைகள் உருவாகும் முன்பே இளைஞர்கள் தங்கள் கருத்துகளை வழங்கும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டு மக்கள் பங்கேற்பு ஆட்சியை மேலும் வலுப்படுத்தும் முக்கிய முயற்சியாக இது அமைகிறது.

இளைஞர் கனவு தளத்தை இந்த இணையதள முகவரியில் அணுகலாம்:https://enkanavu.tn.gov.in

விழுப்புரம் மாவட்டத்தில் ரூ.254.29 கோடி மதிப்பிலான 29 திட்டங்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்.

இதைத்தொடர்ந்து இளைஞர்களின் கனவுகளை பதிவு செய்யும் 'என் கனவு என் எதிர்காலம்' திட்டத்தை அவர் தொடங்கி வைத்தார். ரூ.390 கோடியில் முடிவுற்ற திட்டப்பணி களை திறந்து வைத்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உரையாற்றினார். அப்போது அவர் கூறியதாவது:

* சோழர் காலத்திலும் பல்லவர் காலத்திலும் வர்த்தக நகராக இருந்த சிறப்புக்குரிய நகரம் திண்டிவனம்.
* சென்னையின் நுழைவு வாயிலாக இருப்பது திண்டிவனம்.
* தேர்தல் வாக்குறுதியில் சொல்லாத பல திட்டங்களை அறிவித்து நிறைவேற்றி வருகிறோம்.
* உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டம் மூலம் பெறப்பட்ட 4.5 லட்சம் மனுக்களுக்கு 100 நாட்களில் தீர்வு காணப்பட்டது.
* மக்களின் தேவைகளை உன்னிப்பாக கவனித்து விரைவாக நிறைவேற்றி வருகிறோம்.
* மக்களின் தேவையை கண்டறிந்து அவர்கள் இடத்திற்கே சென்று தீர்வு காணப்படுகிறது.
* உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தை முடக்க சிலர் உச்சநீதிமன்றம் வரை சென்றார்கள். அவர்களுக்கு நீதிமன்றம் அபராதம் விதித்தது.
* பல தடைகளை தாண்டி உங்களுடன் ஸ்டாலின் திட்டம் இன்று வெற்றி பெற்றுள்ளது.
* உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தில் இதுவரை 10,000 முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.
* விழுப்புரம் மாவட்டத்திற்கு தேர்தல் வாக்குறுதிகளாக அறிவித்தது மட்டுமின்றி சொல்லாத வாக்குறுதிகளும் நிறைவே ற்றப்பட்டுள்ளன.
* முதல்வரின் முகவரி திட்டத்தின் வாயிலாக 1.49கோடி மனுக்களுக்கு தீர்வு கண்டுள்ளோம்.
* அரசு சேவைகள் மக்களுக்கு தடையின்றி, விரைவாக கிடைக்க வேண்டும்.
* மக்களின் குறைகள், தேவைகளை உன்னிப்பாக கவனித்து நிறைவேற்றி வருகிறது திராவிட மாடல் அரசு.

# முதியோர் ஓய்வூதியம் ரூ.2,000ஆக உயர்வு... 3 கேஸ் சிலிண்டர் இலவசம்...

## இரண்டாம் கட்ட தேர்தல் வாக்குறுதிகளை வெளிட்ட எடப்பாடி பழனிசாமி



முதியோர் ஓய்வூதியம் ரூ.2,000-ஆக உயர்த்தப்படும், ரேஷன் அட்டைதாரர்களுக்கு ஆண்டுக்கு 3 சிலிண்டர் விலையில்லாமல்வழங்கப்படும் உள்ளிட்ட இரண்டாம் கட்ட தேர்தல் வாக்குறுதிகளை அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டார்.

சென்னை ராயப்பேட்டையில் உள்ள அதிமுக தலைமை அலுவலகத்தில் கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் கட்சியின் மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்குபிறகுசெய்தியாளர்களை சந்தித்த எடப்பாடி பழனிசாமி, இரண்டாம் கட்ட தேர்தல் வாக்குறுதிகளை வெளியிட்டார். அப்போது அவர் பேசுகையில், "சமூக ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் முதியோர்களுக்கு முதியோர் உதவித் தொகை வழங்கப்படும். மேலும், முதியோர் விதவைப் பெண்கள், முதிர் கன்னிகள், கணவரால் கைவிடப்பட்ட பெண்கள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் மூன்றாம் பாலினத்தவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியம் 1200 லிருந்து ரூ. 2,000-ஆக உயர்த்தி வழங்கப்படும்" என்றார். இரண்டாவது வாக்குறுதியாக மாணவர்கள். பெற்றோர்கள் நலன் காக்கும் பொருட்டு, வங்கிகளில் பெற்ற கல்விக் கடனை தள்ளுபடி செய்யும் வகையில், அத்தொகையை அரசே ஏற்கும் எனவும் மூன்றாவது வாக்குறுதியாக வாழ்வாதார உதவியாக, அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு, ஆண்டுக்கு 3 கேஸ் சிலிண்டர்கள் விலையில்லாமல்வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். "தமிழர்களின்வீரவிளையாட்டான காளையை அடக்கும் ஜல்லிக்கட்டு வீரர்கள் அசம்பாவிதம் ஏற்பட்டு உயிரிழக்க நேரிட்டால், அவர்களது குடும்பத்தினருக்கு ரூ.10 லட்சம் வழங்கப்படும். அதேபோல், படுகாயமடைந்தவர்களுக்கு சிகிச்சைக்காக ரூ. 2 லட்சம் வழங்கப்படும் எனவும் மருத்துவ அரசாணை வழங்கப்பட்ட இடங்களில் நடைபெறும் ஜல்லிக்கட்டு போட்டிகளை எழுச்சியோடு நடத்துவதற்கு, அரசின் சார்பில் மானியமாக ரூ.5 லட்சம் வழங்கப்படும் எனவும் ஜல்லிக்கட்டு போட்டி நடத்துவதற்காக தற்போது கடைபிடிக்கப்பட்டு வருகின்ற ஆன்லைன் முறை ரத்து செய்யப்பட்டு, இருந்த பழைய நடைமுறையே (Manual) மீண்டும்பின்பற்றப்படும் எனவும் அவர் தெரிவித்தார். மேலும் இஸ்லாமிய, கிறிஸ்தவ மற்றும் ஏனைய சிறுபான்மை வகுப்பைச் சேர்ந்த மகளிர் சுயதொழில் தொடங்குவதற்கு வட்டியில்லா கடன் வழங்கப்படும் எனவும் மாற்றுத் திறனாளிகள் கூட்டுறவு வங்கிகளில் வாங்கிய கடன் தள்ளுபடி செய்யப்படும் எனவும் அவர் அறிவித்தார்.

# மணிப்பூரில் குடியரசுத்தலைவர் ஆட்சி வாபஸ்



மணிப்பூரில் குடியரசுத்தலைவர் ஆட்சி வாபஸ் பெறப்படுவதாக மத்திய உள்துறை அமைச்சகம் (பிப். 4) அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

மணிப்பூரில் இரு சமூகத்தினருக்கு இடையே ஏற்பட்டமோதல் வன்முறையாக மாறியதைத் தொடர்ந்து 2 ஆண்டுகளுக்கும் மேலாக (2023 -25) அங்கு பதற்ற சூழ்நிலை நிலவியது. இதில் 250க்கும் அதிகமானோர் உயிரிழந்தனர். பல்லாயிரக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டனர். எனினும் அங்கு அவ்வப்போது வன்முறை ஏற்பட்டு வருகிறது.

இந்த தொடர் வன்முறைக்கு பொறுப்பேற்று 2 ஆண்டுகளுக்குப் பிறகு, 2025 பிப். 9 அன்று பிரேன் சிங் தனது முதல்வர் பதவியை ராஜிநாமா செய்தார்

இதைத் தொடர்ந்து அங்கு குடியரசுத்தலைவர் ஆட்சி அமலில் உள்ளது. முதலில் 6 மாதங்கள் குடியரசுத்தலைவர் ஆட்சி இருந்த நிலையில், மேலும் 6 மாதங்கள் நீட்டிக்கப்பட்டது.

குடியரசுத் தலைவர் ஆட்சி வரும் பிப்.12 ஆம் தேதியுடன் நிறைவடைய உள்ள நிலையில் ஆளுநர் அஜய்குமார் பல்லாவைச் சந்தித்து ஆட்சியமைக்க உரிமை கோரியுள்ளது பாஜக.

புது தில்லியில் உள்ள பாஜக தலைமையகத்தில் மணிப்பூர் பாஜக எம்எல்ஏக்களின் கூட்டம் நேற்று நடைபெற்ற நிலையில் பாஜக சட்டப்பேரவைக் குழு தலைவராக யும்நாம் கெம்சந்த் சிங் தேர்வு செய்யப்பட்ட நிலையில், அவர் மணிப்பூரின் புதிய முதல்வராக இன்று(பிப். 4) மாலை பதவியேற்க வாய்ப்புள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்த நிலையில் பாஜகவினர் ஆளுநரைச் சந்தித்து ஆட்சியமைக்க உரிமை கோரியுள்ள நிலையில், மணிப்பூரில் குடியரசுத்தலைவர் ஆட்சி வாபஸ் பெறப்படுவதாக மத்திய உள்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.

# ஒரே நாளில் பவுனுக்கு ரூ.5,040 அதிகரிப்பு;

## மீண்டும் கிராம் ரூ.15,000ஐ நெருங்கியது தங்கம் விலை!



சென்னை: சிறிய ஆறுதலுக்குப் பின்னர் பழையபடி மின்னல் வேகத்தில் உயர்ந்து வருகிறது தங்கம், வெள்ளி விலை.

(பிப்.3) வர்த்தக முடிவின்போது ஒரே நாளில் பவுனுக்கு ரூ.2,560 உயர்ந்து அதிர்ச்சி தந்த தங்கம் விலை, இன்று (பிப்.4) காலையிலேயே பவுனுக்கு ரூ.5,040 உயர்ந்துள்ளது.

சர்வதேச பொருளாதார ச் சூழல், அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு ஆகியவற்றின் அடிப்படை யில், தங்கத்தின் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது.

அந்த வகையில், கடந்தஜன.30,31தேதிகளிலும், பிப்.2-ம் தேதியும்தங்கம்விலை ஏறிய வேகத்தில் இறங்கிவாடிக்கையாளர்களை ஆசுவாசப்படுத்தியது. மூன்று நாட்களில் பவுனுக்கு ரூ.22,800வரைகுறைந்தது. புவி அரசியலில் மாற்றம், ஃபெடரல் வங்கித் தலைவரை ட்ரம்ப் தேர்வு செய்தது, முதலீட்டாளர்கள் தங்கத்தை விற்று லாபம் பார்த்தது எனப் பல காரணங்கள் அதன் பின்னணியில் இருந்தன.

இந்தவிலைகுறைப்பு நீடிக்காதா என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், சென்னையில் நேற்று ஒரே நாளில் மட்டும் தங்கம் விலை மொத்தமாக பவுனுக்கு ரூ.2,560 அதிகரித்தது.

இந்நிலையில்,(பிப்.4) காலை, தங்கம் விலை கிராமுக்கு ரூ.630 உயர்ந்து ஒரு கிராம் ரூ.14900-க்கும், பவுனுக்குரூ.5,040உயர்ந்து ஒரு பவுன் ரூ.1,19,200-க்கும் விற்பனையாகிறது.

வெள்ளி விலையும் உயர்வு: வெள்ளி விலை நேற்று மதியம் கிராமுக்கு ரூ.30 உயர்ந்து ஒரு கிராம் ரூ.300-க்கு விற்கப்பட்ட நிலையில் இன்று மேலும் ரூ.20 உயர்ந்து ஒரு கிராம் ரூ.320-க்கும், கட்டி வெள்ளி ஒரு கிலோ ரூ.3,20,000-க்கும் விற்பனையாகிறது.

செய்திகள்
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குருப்பில்
இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# சென்னை M.N.கண் மருத்துவமனை நடத்தும் இலவச கண் சிகிச்சை முகாம்



கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூர் வட்டம் பாடியந்தல் கிராமத்தில் 04.02.2026 புதன்கிழமை இன்று சென்னை எம்.என்.கண் மருத்துவமனை நடத்தும் இலவச கண் சிகிச்சை முகாம் நடைபெற்றது. இதனை ஊராட்சி மன்ற தலைவர் திருமதி மொட்டை லட்சுமணன் மற்றும் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் திரு K.ஏழுமலை அவர்கள் தலைமை தாங்கி நடத்தினர். மக்கள் இம்முகாமினை பயன்படுத்தி தங்கள் கண்களை பரிசோதனை செய்து மருந்துகள் மற்றும் கண்ணாடிகள் பெற்றுக் கொண்டனர் மேலும் இலவச கண் அறுவை சிகிச்சைக்காக மக்களை அழைத்து சென்றனர்

# கே.என்.ஜி. புதூர் மாரியம்மன் திருக்கோவில் திருக்குட நன்னீராட்டு பெருஞ்சாந்தி பெருவிழா

## முளைப்பாரி மற்றும் தீர்த்தக்குடம் அழைத்து வருதல் நிகழ்ச்சி நடைபெற்றது

கோவை காசி நஞ்சேகவுண்டன் புதூர் அருள்மிகு மாரியம்மன் திருக்கோவில் திருக்குட நன்னீராட்டு பெருஞ்சாந்தி பெருவிழாவின் ஒரு பகுதியாக சுப்பிரமணியம்பாளையம் அருள்மிகு மாரியம்மன்திருக்கோவிலில் இருந்து முளைப்பாரி மற்றும் தீர்த்தக்குடம் அழைத்து வருதல் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் மேள தாளங்கள் முழங்க, கிடாய், நடனக்குதிரை நடனத்துடன் தீர்த்தகுடம் மற்றும் முளைப்பாரி கோவிலுக்கு அழைத்து வரப்பட்டது.

கோவை காசி நஞ்சேகவுண்டன் புதூர் பகுதியில் அமைந்துள்ளது அருள்மிகு மாரியம்மன் திருக்கோவில். இக்கோவிலில் விநாயகப் பெருமான், முருகப் பெருமான், ஆதிநாரயண பெருமாள், அபிராமி உடனமர் அமிர்தகடேஷ்வரர் உள்ளிட்ட பரிவார தெய்வங்கள் அருள்பாளித்து வருகின்றன.

இந்நிலையில் கோவில் புணரமைக்கப்பட்டு திருக்குட நன்னீராட்டு பெருஞ்சாந்தி பெருவிழா வரும் 6ம் தேதி விமர்சையாக நடைபெறவுள்ளது. இதில் கடந்த ஞாயிறன்று மஹா கணபதி ஹோமத்துடன் திருக்குட நன்னீராட்டு பெருவிழா நிகழ்ச்சி தொடங்கியது.

திங்கட்கிழமை பஞ்சகவ்ய பூஜை, மூர்த்தி ஹோமம், சாந்திஹோமம், தீஆரதனை நடைபெற்றது. இதையடுத்து இன்று சுப்பிரமணிய ம்பாளையம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோவிலில் இருந்து முளைப்பாரி மற்றும் தீர்த்தக்குடம் அழைத்து வருதல் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் சுமார் 500 க்கும் மேற்பட்ட பெண்கள் மற்றும் குழந்தைகள் ஒரே மாதிரியான உடையணிந்து முளைபாரியை கைகளில் ஏந்தி ஊர்வலமாக வந்தனர். 10 க்கும் மேற்பட்ட தீர்த்த க்குடங்கள் சுப்பிரமணியம் பாளையம் மாரியம்மன் கோவிலை வலம் வந்து அங்கிருந்து காசி நஞ்சேகவுண்டன் புதூர் அருள்மிகு மாரியம்மன் கோவிலுக்கு புறப்பட்டது.

இந்த ஊர்வலம் மேள தாளங்கள் முழங்க, கிடாய்கள், நடனக்குதிரை நடனத்துடன் தீர்த்தகுடம் மற்றும் முளைப்பாரி கோவிலுக்கு அழைத்து வரப்பட்டது.



கோவிலை வந்தடைந்ததும் தீர்த்தக்குடங்களுக்கு பூஜைகள் செய்யப்பட்டு தீபாரதனை காண்பிக்கப்பட்டது. மேலும் முளைபாரியைகளை வேள்வி வளாகத்தில் வைக்கப்பட்டது. தொடர்ந்து ஆயிரக்கணக்காணவர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் சுற்று வட்டாரங்களில் இருந்து திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து மாலை முதற்கால வேல்வி பூஜைகளும், புதன் கிழமை இரண்டாம் கால வேள்வி மற்றும் மூன்றாம் கால வேள்வி யாகங்களும் நடைபெறவுள்ளது. அதேபோல் வியாழன்று நான்காம் கால வேள்வி, ஐந்தாம் கால வேள்விகள் நடைபெறுகிறது. வெள்ளிக்கிழமை ஆறாம் கால வேள்வியை தொடர்ந்து ராஜ கோபுர கலசங்களுக்கு புனித நீர் ஊற்றப்பட்டு திருக்குட நன்னீராட்டு பெருவிழா நடைபெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை கோவில் நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் செய்திருந்தனர்.

# அதிமுக மூத்த முன்னோடிக்கு கனகாபிஷேக விழா



செங்கல்பட்டு மாவட்டம் எலப்பாக்கம் ஊராட்சியில் அதிமுக மூத்த முன்னோடிக்கு கனகாபிஷேக விழா நடைபெற்றது. எலப்பாக்கம் ஊராட்சியில் வசித்து வரும் வரதாரெட்டியார் சரஸ்வதி ஆகியோரின் 90 வயது எட்டிய நிலையில் அவரது மருமகன் ஜி.நாராயணசாமி ரெட்டியார் விஜயலட்சுமி ஆகியோர் கானகாபிஷேகம் செய்தனர். இந்நிகழ்வில் செங்கை கிழக்கு மாவட்ட செயலாளர் திருகழுக்குன்றம் எஸ்.ஆறுமுகம், மதுராந்தகசட்டமன்றஉறுப்பினர் மரகதம் குமரவேல், அம்மா பேரவை மாவட்ட செயலாளர் ஆனூர் வி.பக்வாச்சலம் உள்ளிட்டோர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டனர். வெளியம்பாக்கம் ரமேஷ், கரசங்கால் பன்னீர்செல்வம், ஒரத்தி ஆறுவேல், சந்திரபாபு, வினோத், அம்மனூர்கோவிந்தன், இளைஞர் மற்றும் இளம் பெண்கள் பாசறை மாவட்ட துணைச்செயலாளர் எலப்பாக்கம் என்.விக்னேஷ், குமார், மோகல்வாடி ராமமூர்த்தி, எலப்பாக்கம் சக்கரபாணி, ராஜேஷ் கழகநிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முன்னாள் முதல்வர் அண்ணா நினைவு நாளை முன்னிட்டு ஈரோடு பன்னீர்செல்வம் பூங்காவில் அமைந்துள்ள அண்ணா சிலைக்கு திராவிடர் கழகம் மற்றும் திராவிட இயக்கத் தமிழர் பேரவை சார்பில் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இந்த நிகழ்ச்சியில் திராவிடர் கழகம் மற்றும் திராவிட இயக்கத் தமிழர் பேரவை நிர்வாகிகள் பேராசிரியர் காளிமுத்து,சண்முகம்,பாலகிருஷ்ணன், எழுத்தாளர் பெரியசாமி. மணிமாறன்,சேகர், தமிழ்க்குமரன், சுந்தரமூர்த்தி, தேவராஜ் கலந்து கொண்டு மரியாதை செலுத்தினர்.

## பேரறிஞர் அண்ணாவின் 57வது நினைவு நாள்

# 2 மற்றும் 2 அ வட்ட கழகங்கள் சார்பாக துடியலூர் மன்றத்தில் அண்ணா திருவுருவ படத்திற்கு மலர் தூவி மரியாதை



தமிழக முன்னாள் முதல்வர் பேறறிஞர் அண்ணாவின் 57வது நினைவு நாளை ஒட்டி கோவை துடியலூர் திமுக 2 மற்றும் 2 அ வட்ட கழகங்கள் சார்பில் அண்ணாவின் திரு உருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர்கள் தூவி மரியாதை செய்யப்பட்டது.

தமிழக முன்னாள் முதல்வர் பேறறிஞர் அண்ணாவின் 57வது நினைவு நாளை ஒட்டி பல்வேறு கட்சியினர் தமிழகம் முழுவதும் அஞ்சலி செலுத்தி வருகின்றனர். ஒதன் ஒருபகுதியாக கோவை துடியலூர் திமுக 2 மற்றும் 2 அ வட்ட கழகங்கள் சார்பில் நினைவஞ்சலி நிகழ்ச்சி நடைபெற்றது

துடியலூர் திமுக மன்றத்தில் நடைபெற்ற இந்நிகழ்விற்கு கிழக்கு பகுதி கழக பொறுப்பாளர் அருள்குமார் தலைமை தாங்கினார். வட்டக் கழக அவைத் தலைவர் ராஜகோபால் முன்னிலை வகித்தார். தொடர்ந்து அங்கு வைக்கப்பட்டிருந்த அண்ணாவின் திரு உருவப்படத்திற்கு அனைவரும் மாலை அணிவித்து மலர்கள் தூவி மரியாதை செய்யதனர்.

இரண்டாவது வட்டக் கழக பொறுப்பாளர் தமிழ்நிதி ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த அனுசரிப்பு நிகழ்வில் கழக நிர்வாகிகள் ஆறுச்சாமி, அருக்காணி, சி டி சி சுப்பிரமணியன், வெற்றிச்செல்வன், ராமசாமி, பன்னீர், தமிழ்ச்செல்வி, வாசு, கோமதி, செல்வி, தனபாக்கியம், அயூப்கான், ரவி, பாலுசாமி, டி எஸ் ராமசாமி, சீனிவாசன், பழனிச்சாமி, செல்வி சுப்பிரமணியன், லட்சுமி, வேணுகோபால், சி டி சி ஆனந்தன், கிருஷ்ணசாமி, செல்வராஜ், உள்ளிட்ட நிர்வாகிகள் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டு மலர்கள் தூவி மரியாதை செய்தனர்.

## கோவை பங்கஜா மில் சாலையில் உள்ள, ஜெம் மருத்துவமனை சார்பில்

# உலக புற்றுநோய் தினத்தை முன்னிட்டு செயற்கை நுண்ணறிவு விழிப்புணர்வு தளத்தை “டாக்டர் ஜெம்” எனும் பெயரில் அறிமுகம் செய்யும் நிகழ்ச்சி நடைபெற்றது




உலக புற்றுநோய் தினத்தை முன்னிட்டு கோவை ஜெம் புற்றுநோய் மையம் சார்பில், புற்றுநோயை எதிர்த்து வெற்றிபெற்றநோயாளிகளை கௌரவிக்கும் சிறப்பு நிகழ்ச்சியும், "டாக்டர் ஜெம்" எனும் செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான புற்றுநோய் அறிவுத்தளத்தின் அறிமுக நிகழ்ச்சி நடைபெற்றது.

நோயாளிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு புற்றுநோய் தொடர்பான துல்லியமான, அறிவியல் ஆதாரமுள்ள மற்றும் நம்பகமான தகவல்களை வழங்கும் நோக்கில் உருவாக்கப்பட்ட இந்ததளம், நோயாளிகளின் சிகிச்சை புரிதலை மேம்படுத்தி, தகவல் அறிந்த சரியான முடிவுகளை எடுக்க உதவும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. நிகழ்வில் உரையாற்றிய ஜெம் புற்றுநோய் மையத்தின் தலைமை நிர்வாகஅதிகாரி டாக்டர் பிரவீன் ராஜ் கூறியதாவது..இன்றைய காலகட்டத்தில் புற்றுநோய் குறித்த தவறான தகவல்கள் நோயாளிகளுக்கு பெரும் சவாலாக உள்ளன. இதனை எதிர்கொள்ள, சரியான அறிவியல்அடிப்படையிலான தகவல்களை தேவையான நேரத்தில் வழங்குவதற்காக டாக்டர் ஜெம் உருவாக்கப்பட்டுள்ளது.

இது நோயாளிகளின் நம்பிக்கையையும், சிகிச்சை குறித்த புரிதலையும் அதிகரித்து, தகவல் அறிந்த முடிவுகளை எடுக்க அவர்களுக்கு வழிவகுக்கும், என்றார். இந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்களாக இஸ்ரோ விஞ்ஞானி, பிரம்மோஸ் திட்டத்தின் தந்தை ஏன்றழைக்கபடும் டாக்டர் ஏ.சிவதாணு பிள்ளை, மற்றும் மேற்கு மண்டல காவல்துறை தலைவர், சரவண சுந்தர், ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

அவர்களின் பங்கேற்பு, புற்றுநோய்க்கு எதிரான போராட்டத்தில் அறிவியல், தலைமைத்துவம் மற்றும் சமூகப் பொறுப்பு ஆகியவை ஒன்றிணைவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தியது.

இந்த நிகழ்ச்சியில் புற்றுநோய் நிபுணர்கள், சுகாதார வல்லுநர்கள், புற்றுநோயிலிருந்து மீண்டவர்கள் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# புதிய ஆரம்ப சுகாதார நிலையம் கட்ட வேண்டும் என்ற கோரிக்கை

ஆலங்குளம் சட்டமன்ற தொகுதி மேல ஆம்பூர் கிராமம் கருத்தபுள்ளையூரில் கடந்த 1986 ஆம் ஆண்டு கட்டப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. மேல ஆம்பூர் கிராமத்தில் சுமார் மூவாயிரத்து எண்ணூறு வாக்காளர்களும் 8000க்கும் மேற்பட்ட பொதுமக்களும் வசித்து வருகிறார்கள். ஆரம்ப சுகாதார நிலையம் அமைவதற்கு முன்னால் இப்பகுதி மக்கள் 16கிலோமீட்டர் தூரத்தில் அமைந்துள்ள அம்பை கடையம் போன்ற பகுதியில் இயங்கி வருகிற மருத்துவமனைக்கு தான் சென்று வந்துள்ளார்கள் .| 1986 இல் கட்டப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் தற்போது இடியும் நிலையில் பழுதடைந்து காணப்படுகிறது



இன்றைய தேதி வரையில் அந்த கட்டிடத்தில் வைத்து தான் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது

ஏற்கனவே ஆரம்ப சுகாதார நிலையம் அருகே பள்ளிக்கூடம் அமைந்துள்ளது அந்த இடத்தில் திருத்திஅமைக்கப்பட்டநிதியில்புதியஆரம்பசுகாதார நிலையம் கட்ட முடியாத சூழ்நிலையில் இடவச இடம் அமைந்துள்ளது

எனவேஅந்த ஊரில் இருக்கிற அரசு புறம்போக்கு நிலத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் கட்ட வேண்டும்என்றகோரிக்கைபொதுமக்கள் சார்பிலும் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் வின்சென்ட் அவர்கள் சார்பிலும் தங்களுக்கு மனுவாக வழங்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலி நாடாளுமன்ற உறுப்பினர் திரு ராபர்ட் புருஸ் அவர்களும் மருத்துவத்துறை நிதியிலிருந்து அல்லது பொது நிதியிலிருந்து அல்லது சுரங்கத் துறை நிதியிலிருந்து கட்டிடம் கட்டுவதற்கு நிதி ஒதுக்க வேண்டி தங்களுக்கு கடிதம் கொடுத்துள்ளார்கள்

ஏற்கனவேஊர்பொதுமக்கள்சார்பில்நாடாளுமன்ற உறுப்பினர் அவர்களிடம் நிதி ஒதுக்கி தருமாறும் கோரிக்கை வைக்கப்பட்டு நாடாளுமன்ற உறுப்பினரும் நிதி ஒதுக்குவதாக சொல்லி இருப்பதாகவும் தெரிகிறது .

மக்களுடன் முதல்வர் திட்டத்தின் கூட்டத்திலும் புதியகட்டிடம்கட்டுவதற்குமனு வழங்கப்பட்டுள்ளது

கடந்த ஜனவரி 26 ஆம் தேதி நடைபெற்ற கிராமசபை கூட்டத்திலும் மேல ஆம்பூர் ஊராட்சியில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது

தற்போது ஆரம்ப சுகாதார நிலையம் அமைந்துள்ள இடம் புதிய கட்டிடம் கட்டுவதற்கு போதுமான இடவசதி இல்லாததால் கருத்தபுள்ளையூரில் மாற்று இடங்கள் நிறைய இருக்கின்றன அதில் ஒன்றைதேர்வு செய்து பொதுமக்கள்சென்று வர வசதியுள்ள இடத்தில் ஆரம்ப சுகாதார நிலைய புதிய கட்டிடம் அமைத்திட வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்

அன்புடன்
பொ.சிவ பத்மநாதன் எம்.ஏ.பி.எல்
வழக்கறிஞர்
மாவட்ட திமுக முன்னாள் செயலாளர்
பாவூர்சத்திரம்

இணைப்பு
1.நாடாளுமன்ற உறுப்பினரின் கடிதம் நகல்
2. முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் வின்சென்ட் அவர்களின் கோரிக்கை மனு நகல்
3. பள்ளி தலைமை ஆசிரியர் கொடுத்த நகல்

# பவானி காவல் நிலைய கூட்டுக்கொள்ளை முயற்சியில் ஈடுபட்ட வாலிபர் கைது

ஈரோடு மாவட்டம், பவானி காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட பவானி புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள புதிய காவேரி ஆற்று பாலம் சோதனை சாவடியில்,கடந்த16.11.2025ம் தேதி பவானி போலீசார் வாகன தணிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது சந்தேகப்படும்படி வந்த மாருதி 800 காரை (TN 38 B 2151) சோதனை செய்ய நிறுத்த முயன்ற போது, காரில் பயணித்த 5 நபர்கள் காரை நிறுத்தியும்



நிறுத்தாமல் சென்றவர்களை போலீசார் பின்னால் துரத்தி சென்று பேருந்து நிலையம் அருகில் உள்ள மையூரா காம்ளெக்ஸ் முன்பு மடக்கி பிடித்தனர். அச்சமயம் காரில் பயணித்த 5 நபர்களில் 3 நபர்கள் தப்பி ஓடிவிட்டனர், மீதம் உள்ள இருவரை பிடித்து விசாரித்தபோது, அவர்கள் புளியம்பட்டியை சேர்ந்த ரமேஷ் என்பவரின் மகன் சஞ்சை (17) மற்றும் சத்தியமங்கலம் உத்தண்டியூர், பூசாரிபாளையத்தை சேர்ந்த செந்தில்குமார் மகன் நித்தீஷ் (17) ஆவர். மேலும் காரினுள் சோதனை செய்த போது 250 கிராம் கஞ்சா, கொள்ளை அடிக்க பயன்படுத்துவதற்காக மறைத்து வைத்திருந்த பட்டா கத்தி, வீச்சருவாள் மற்றும் சூரி கத்திகள் பறிமுதல் செய்யப்பட்டு பவானி காவல் நிலையத்தில் கூட்டுக்கொள்ளை முயற்சி வழக்கு பதிவு செய்யப்பட்டு பிடிபட்ட இருவரையும் கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்டது. மேலும் வழக்கில் சம்பந்தப்பட்ட மற்ற 3 தலைமறைவு எதிரிகளையும் பிடிக்க பவானி காவல் ஆய்வாளர் நவநீதகிருஷ்ணன்தலைமையிலானதனிப்படையினர் நியமிக்கப்பட்டுதலைமறைவு எதிரிகளை தேடப்பட்டு வந்த நிலையில் தலைமறைவு எதிரிகளில் முக்கிய எதிரியும் பழங்குற்றவாளியுமான பவானிசாகர், கோழிபண்ணை, புதிய இலங்கை அகதிகள் முகாமை சேர்ந்த கேத்தீஷ்வரன் மகன் ராகவன் (எ) கரன் (எ) கோழிகரன் (28) என்பவரை 03.02.2026 பவானி ஆப்பக்கூடல் சாலை ஜம்பை கருக்குபாளையம் பிரிவு கழுங்கு ஏரி அருகில் வைத்து பவானி காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான தனிப்படையினர் கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி சிறையில் அடைத்தனர்.



சேலம் மாவட்டம் தொளசம்பட்டியில் எழுந்தருளியுள்ள அருள்மிகு ஸ்ரீ நாகர் சுவாமி ஆலயத்தில்வருடம்தோறும்தைமாதம்நாகர்பண்டிகைவிமர்சையாககொண்டாடப்படும். அதேபோல்இந்தவருடமும்நாகர்பண்டிகைதைமாதம்(03.02.2026)செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. நாகர் சாமி மற்றும் முத்துக்குமார சுவாமிக்கு சிறப்பு அபிஷேக ஆராதனை மற்றும் சிறப்பு அலங்காரம் சிறப்பான முறையில் நடைபெற்றது காலை 800 மணிக்கு அருள்மிகு ஸ்ரீ நாகர் சுவாமி, பூங்கரகத்துடன், ஸ்ரீ முத்துக்குமார சுவாமி வெள்ளி மயில் வாகனத்தில் நவவீரர் படைக்கோலத்துடன் மக்கள் வெள்ளத்தில் ஊர்வலம் வந்தார் . ஸ்ரீ நாகர் சுவாமி கோவிலில் பொங்கல் வைபவமும் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து திரளான பக்த கோடிகள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். பக்தர்களுக்கு சிறப்பு அன்னதானம் வழங்கப்பட்டது. மாலை சுவாமிக்கு ஆடு கோழி வெட்டி நேற்றிக் கடன் செலுத்தி சுவாமியை வழிபட்டனர்.5000க்கும் மேற்பட்ட பக்தர்கள்கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். வெள்ளிக்கிழமையில் மஞ்சள் நீராட்டத்துடன் பண்டிகை நிறைவடைகிறது.

## ஈரோடு மாவட்ட வ.ஊ.சி. விளையாட்டு மைதானத்தில் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன



ஈரோடு மாவட்ட வ.ஊ.சி விளையாட்டு மைதானத்தில் பள்ளி கல்லூரி மாணவர்களுக்கானவிளையாட்டுப் போட்டிகளானது நடைபெற்றன.

சுமார் 350 க்கும் மேற்பட்ட மாணவ – மாணவிகள் ஆர்வத்துடன்கலந்து கொண்டு நீளம் தாண்டுதல்,குண்டு எறிதல், தடகளம் என பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. இந்த நிகழ்விற்குசிறப்புவிருந்தினராக வருகை தந்த கோவிந்தராஜ் ஈரோடு மாவட்ட தடகள சங்க செயலாளர் முன்னாள் அரசு தரப்பு வழக்கறிஞர் ராஜா,முன்னாள்புகைப்பட சங்க தலைவர் செல்வராஜ்,இணை செயலாளர் அன்பரசு,டிஎஸ்ஆர் EV சரக்கு ஆட்டோ ஈரோடு பிரிவு தலைவர்கள் மனோகரன் மற்றும் ரகுநாத், கனெக்டிங் புயுட்சர் ஆட்டோமோட்டிவ் பிரைவேட் லிமிடெட் நிறுவன நிர்வாக இயக்குனர் சுபத்ரா மற்றும் நிதி ஆலோசகர் குருராஜன் சாயி ராஜ் கல்வி அறக்கட்டளை நிறுவனர் வரதராஜன்,சமூக சேவகர் மாயா வெங்கடேஷ்,வினோத். கலந்துகொண்டு வெற்றி பெற்ற மாணவ– மாணவிகளுக்குபதக்கங்களையும், சான்றிதழ்களையும் மற்றும் கோப்பையும் தந்து கௌரவித்தனர். இப் போட்டியிகளுக்கான ஏற்பாட்டினை இன்ஸ்பயர் தடகள பயிற்சி பள்ளியும் மற்றும் பாரத் யுவா விளையாட்டு கூட்டமைப்பும் இணைந்து நடத்தினர். பெண்களுக்கான சிறப்பு உடற் பயிற்சியாளரும் இன்ஸ்பயர் விளையாட்டு பயிற்சி பள்ளியின் பொருளாளருமான மதுமிதா, தலைமை தடகள பயிற்சியாளர் சதீஷ்குமார், ஸ்வஸ்திஹா சாதனை விளையாட்டு மற்றும் உடற்கல்வி இயக்குனரும்தடகளபயிற்சியாளரும் பாரத் யுவா விளையாட்டு கூட்டமைப்பின் தலைவருமான தேவகாந்தன் தடகள விளையாட்டுப் போட்டியில் முதல் இடத்தை ஆர்.எஸ் .ஜி. ஸ்போர்ட்ஸ் அகாடெமி, இரண்டாம் இடத்தை ஃப்ரண்ட்லைன் நியூஜென் சர்வதேசபள்ளியும். மூன்றாம் இடத்தை தி காரட் சீட் சர்வதேச பள்ளி, நான்காம் இடத்தில் ஈரோடு இன்ஸ்பயர் ஸ்போர்ட்ஸ் அகாடமி ஆகியோர் பதங்கள் மற்றும்பாராட்டுச் சான்றிதழ்கள் பெற்றனர் .மேலும் கல்லூரிகளுக்கு இடையிலான போட்டிகளில் தனியார் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் மாணவர்கள் பதக்கத்தை வென்றனர்.

## தூத்துக்குடியில் உதயா எசன்ஸ் மார்ட் உரிமையாளரின் மகள் நிவேதா பூப்புனித நீராட்டு விழாவில் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் தலைவர் ஏ.எம்.விக்கிரமராஜா, அமைச்சர் கீதாஜீவன் உள்ளிட்டோர் பங்கேற்று வாழ்த்தினர்



தூத்துக்குடி பிளாஸ்டிக் பொருட்கள் விற்பனையாளர்கள் சங்க துணைத்தலைவரும், உதயா எசன்ஸ் மார்ட் உரிமையாளருமான உதயசந்திரன் (எ) கண்ணன்& தங்கேஸ்வரி (எ) கார்த்திகா மகள் நிவேதா பூப்புனித நீராட்டு விழா தூத்துக்குடி மாநகராட்சி மாநாட்டு மையத்தில் நடைபெற்றது. விழாவில் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் மாநிலத்தலைவர் ஏ.எம். விக்கிரமராஜா பங்கேற்று வாழ்த்தினார். தொடர்ந்து தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக செயலாளரும், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சருமான கீதாஜீவன் கலந்து கொண்டு வாழத்தினார். தொடர்ந்து மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டுவாழ்த்துதெரிவித்தனர்.

விழாவில், தூத்துக்குடி மாநகதிமுக செயலாளர் ஆனந்தசேகரன், தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் மண்டலதலைவர் ராதாகிருஷ்ணன், தூத்துக்குடி வடக்கு மாவட்ட தலைவர் சோலையப்பராஜா, மாநில துணைத்தலைவர் வெற்றிராஜன், மாநில இணைச் செயலாளர் பீட்டர், மாவட்ட செயலாளர் மகேஸ்வரன், பொருளாளர் ஆனந்த்பொன்ராஜ், பிளாஸ்டிக் பொருட்கள் விற்பனையாளர்கள் சங்க தலைவர் செந்தில்குமார்,செயலாளர் சுதாகர், பொருளாளர் ஜெயராஜ், மாவட்ட சோடா, கலர் உற்பத்தியாளர்கள் சங்க தலைவர் நல்லகண்ணன், செயலாளர் தனசேகரன், பொருளாளர் நம்பிராஜன், தொழிலதிபர்கள் தங்கம் ஸ்டோர்ஸ் திருமணி, வேலவன் ஹைபர் மார்க்கெட்ட தங்கவேல், கவின்பேப்ரிக்ஸ்ஜெயக்குமார், பாலசரஸ்வதி சிட்பண்ட்ஸ் பாலகிருஷ்ணன், திமுக வட்டச்செயலாளர் ரவீந்திரன், கொம்பன் சங்கர்,கொம்பன் பாஸ்கர்,திரவியபுரம் பத்திரகாளியம்மன் தர்மகர்த்தா செல்வராஜ், அகில இந்திய நாடார் பேரவை சொர்ணவேல்குமார், பனங்காட்டு மக்கள் கழகம் சிலுவை, அ.இ.நா.பேரவைமாவட்ட பொறுப்பாளர் துரை, நாடார்பேரவை குருராஜ், விவேகா எசன்ஸ் மார்ட் சங்கர், தெற்கு மாவட்ட பாஜக பொருளாளதார பிரிவு சரவணக்குமார், அபிநயா ஜுவல்லர்ஸ் கிருஷ்ணமூர்த்தி, பிர்பாத் எசன்ஸ் கவுஸ் அகமது இப்ராஹிம், புதுக்கோட்டை அனைத்து வியாபாரிகள் முன்னேற்றச்சங்க செயலாளர்கள் கே.பெரியசாமி, முருகன், இணைச்செயலாளர் சக்திவேல் முருகன், பி.கே.பில்டர்ஸ் மாரிமுத்து, திமுக பகுதி செயலாளர் ஜெயக்குமார், சுற்றுச்சூழல்அணி துணை அமைப்பாளர் மகேஸ்வரன்சிங், பெருமாள்கோவில் அறங்காவலர் குழு தலைவர் செந்தில்குமார் மற்றும் அல்பர்ட் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டுவாழ்த்தினர்.

பூப்புனித விழாவிற்கு வருகைதந்தவர்களை சுந்தரலிங்கம், அனந்தம்மாள், தங்கவேல், ஜெயலீலா, பாஸ்கர், பாக்கியலட்சுமி, ஆனந்தராஜேஷ், ஐஸ்வர்யா, ஷர்வின், புவனேஷ், அனிஸ் கார்த்திகேயன், பாண்டிச்செல்வம், ரேவதி உள்ளிட்டோர் வரவேற்றனர்.

## தூத்துக்குடி மாவட்டம் கிள்ளிகுளம் வ.உ.சி. வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் கிள்ளிகுளம் கல்லூரியின் முதல்வர் தேரடி மணி கல்லூரி சமையல் பகுதி மற்றும் சமையல் பொருட்கள் உள்ள பகுதி முழுவதும் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்





தூத்துக்குடி மாவட்டம் கிள்ளிகுளம் வ.உ.சி வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் கிள்ளிகுளம் கல்லூரியின் முதல்வர் தேரடி மணி கல்லூரி சமையல் பகுதி மற்றும் சமையல் பொருட்கள் உள்ள பகுதி முழுவதும் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இது குறித்து அவர் தெரிவிக்கையில்: இந்தக் கல்லூரி 1984ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மூன்றாவது பெரிய கல்லூரி ஆகும் முதலாவது கோயம்புத்தூர், இரண்டாவது மதுரை, மூன்றாவது கிள்ளிகுளம் இந்தக் கல்லூரியில் சிறப்பு அம்சம் என்னவென்றால் இந்த கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு 39வருடம் ஆகி கொண்டு இருக்கிறது இந்த கல்லூரியில் இதுவரை 60 ஐஏஎஸ், ஐபிஎஸ், சிவில் சர்வீஸ் இதில் இருக்கிறார்கள் வெளிநாடுகளிலும் இருக்கிறார்கள் வரலாறு சிறப்புமிக்க இந்த கல்லூரி என்னவென்றால் 1200 ஏக்கர் இந்த கல்லூரி இதில் விவசாயம் சம்பந்தப்பட்டது மற்றும் பழங்கள் வனவியல்சம்பந்தப்பட்ட துறையில் இருக்கிறது. மேலும் கல்லூரியில் 4 ஆண்டுகளில் சேர்த்த மாணவர்கள் சேர்க்கை 750பேர் இருக்கிறார்கள். இதில் கரூர் மற்றும் கீழ வேலூர் மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளார்கள். கடந்த ஆண்டு கனிமொழி எம்பி அவர்கள் இந்த கல்லூரிக்கு வந்தார்கள் இந்த கல்லூரியின் சிறப்பு அம்சங்களை பார்த்து கல்லூரியின் பரப்பளவு பார்த்துவிட்டு இந்த கல்லூரியை நல்ல முறையில் கொண்டு வர வேண்டும் என்று விவசாயிகளுக்கு பனை ஆராய்ச்சி நிலையம் வாழைஆராய்ச்சிநிலையம் வேண்டுமென்று விவசாயிகள் கோரிக்கையை ஏற்று சுமார் 10கோடி செலவில் பனை ஆராய்ச்சி நிலையம் மற்றும் வாழை ஆராய்ச்சி நிலையம் 2023ஆம் ஆண்டு திட்டத்தின் கீழ் ஆராய்ச்சி நிலையம் இங்கு செயல்பட்டுள்ளது. மேலும் இந்த கல்லூரியில் சுத்தமான மாசு இல்லாத கல்லூரி என அங்கீகாரம் கிடைத்துள்ளது. அதுபோல் இங்கு தாமிரபரணி தண்ணீரும் சுத்தமாக குடிநீராக உள்ளது. இதுபோல் மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு மற்றும் விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று அதற்கேற்ற பயிற்சி ஆசிரியர்கள் கொடுத்து வருகிறோம். தொடர்ந்து இந்த கல்லூரி விடுதியை சொல்ல வேண்டும் என்றால் நிறைய கேள்விப்படுகிறோம் எங்களுடைய கல்லூரியின் பெயரை கெடுக்க வேண்டும் என்று நோக்கத்துடன் அநேகர் செயல்படுகின்றனர் என்று எங்களுக்கு தெரியும் இருந்தாலும் நாங்கள் சொல்வது என்னவென்றால் கல்லூரி விடுதியை மாணவர்களைக் கொண்டு நடத்துகின்றோம். இதில் அனைத்தும் கொள்முதல் செய்வது அவர்களே இதில் ஒரு ஆளுக்கு 75 ரூபாய் மூன்று வேலையும்சாப்பாடு வாரத்திற்கு இரண்டு முறை அசைவ உணவு எவ்வளவு வேண்டுமானாலும் சாப்பிடலாம் இந்த கல்லூரியில் செய்து வருகிறோம் மாணவர்களுக்கு எப்போதும் தரமான உணவு வழங்கப்படுகிறது இதில் FSSAI அங்கீகாரத்தில் செயல்படுகிறது என்று தெரிவித்தார்.

## ஈரோட்டில் விசைத்தறி கூடங்களை பாஜக மாநில நெசவாளர் அணி தலைவர் அண்ணாதுரை நேரில் ஆய்வு: ஜிஎஸ்டி நிலுவைத்தொகை பெற்றுத்தர உறுதி





ஈரோடு விசைத்தறி உரிமையாளர்கள் சங்கத்தின் செயலாளர் அவர்களின் விசைத்தறி கூடங்களை (குடோன்) பார்வையிடுவதற்காக, பாஜக மாநில நெசவாளர் அணி தலைவர் அண்ணாதுரை ஈரோட்டிற்கு வருகை தந்தார். அவருக்கு சங்கத்தின் சார்பில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து, விசைத்தறி கூடங்களில் நடைபெறும் துணி உற்பத்திப் பணிகளை அவர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர், சங்கத்தின் சார்பில் அவருக்கு தேநீர் விருந்து அளிக்கப்பட்டது. இந்தச் சந்திப்பின் போது, விசைத்தறித் தொழில் சந்தித்து வரும் தற்போதைய சவால்கள் மற்றும் தொழில் சார்ந்த இக்கட்டான சூழ்நிலைகள் குறித்து சுமார் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக சங்க நிர்வாகிகள் அவருக்கு விரிவாக விளக்கிக் கூறினர். நிர்வாகிகளின் கோரிக்கைகளை மிகுந்த பொறுமையுடன் கேட்டறிந்த திரு. அண்ணாதுரை அவர்கள், குறிப்பாக விசைத்தறி உரிமையாளர்களின் நீண்ட நாள் கோரிக்கையான தொகையை விரைந்து பெற்றுத் தருவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாக உறுதியளித்தார். மேலும்,இது தொடர்பாக மத்திய அமைச்சர்களை நேரில் சந்தித்து முறையிட உரிய ஏற்பாடுகளைச் செய்து தருவதாகவும் அவர் உறுதியளித்துள்ளார். இந்தத் தகவல் விசைத்தறி உரிமையாளர்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

## ஆலங்குளம் வட்டார நூலகத்திற்கு திருப்பரங்குன்றம் முழு வரலாறு ஆய்வு நூல் வழங்கப்பட்டது



மாண்புமிகு கழகத் தலைவர் தமிழக முதல்வர் அவர்களின் திருக்கரத்தால் வெளியிடப்பட்ட நூலாசிரியர் சூர்யா சேவியர் அவர்கள் எழுதிய திருப்பரங்குன்றம் முழு வரலாறு ஆய்வு நூல் 20 புத்தகங்களை இன்று ஆலங்குளம் வட்டார நூலகத்திற்கு வழங்கினோம்

நூலின் பெருமையையும் நூலில் இடம் பெற்றுள்ள கருத்துக்களையும் அத்தியாவசியமாக மாணவர்கள் படிக்க வேண்டும் என்பதையும் அதில் பண்டைய சேர சோழ பாண்டியர்கள் வரலாறு ,முதல் தமிழ் சங்கம், இடைச்சங்கம் கடைச்சங்கம் வரலாறு திருப்பரங்குன்றம் மலைதோன்றிய வரலாறு சிக்கந்தர் எங்கிருந்து வந்தார் எப்படி இறந்தார் அவருக்கு தர்க்கா எழுப்பிய பாண்டிய மன்னன் யார் என்கிற செய்திகளை ஆதாரத்தோடு விக்கி கி இருப்பதை மாணவர்களிடம் எடுத்துக் கூறியும் சமூகவியல்,, அறிவியல் , வரலாற்று ஆய்வுகள் போன்ற குறிப்புகள் இடம்பெற்றுள்ளது இந்த புத்தகத்தில் கண்டுள்ள கருத்துக்கள் அரசு எழுத்து தேர்வுக்கு பயன்படும் என்ற கருத்தைபேசிபுத்தகத்தை வழங்கினோம் நிகழ்ச்சிக்கு வாசகர் வட்ட தலைவர் தங்க செல்வம் தலைமை தாங்கினார் நூலக வாசகர்கள் அன்பழகன் சாலமோன் சோனா மகேஷ் முன்னிலை வைத்தனர் முன்னாள் மாவட்ட திமுக செயலாளர் சிவபத்மநாதன்நூல்களைவழங்கி சிறப்பித்தார்

நிகழ்ச்சியில் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் அதிக பெருமாள் தொழிலதிபர் ஜி எஸ் செல்வம் சிவசக்தி மற்றும்பலர்கலந்துகொண்டனர்.

## நம்பியூர் காவல் நிலைய சரகத்தில் தவறவிட்ட நகை பெட்டியை எடுத்து காவல் நிலையத்தில் கொடுத்த நபருக்கு பாராட்டு

ஈரோடு மாவட்டம், நம்பியூர் காவல் நிலைய சரகத்தில் ஜெயகுமார்(35), த/பெ.வெங்கிடுசாமி, 77 மெயின் ரோடு, வெங்கடேஷ்வரா மண்டபம், கோன்னமடையை சேர்ந்த நபர் தனது சொந்த வேலையின் காரணமாக கே.மேட்டுப்பாளையம், தென்பாண்டியன் மில்லிற்கு அருகில் சென்று கொண்டிருந்த போது ரோட்டில் கிடந்த நகை பெட்டியை பார்த்து எடுத்து கொண்டு நம்பியூர் காவல் நிலைய ஆய்வாளரிடம் சென்று ஒப்படைத்தார். பிறகு, காவல் நிலையத்தில் வைத்து நகை பெட்டியை திறந்து பார்த்தபோது அதில் 21 பவுன் தங்க நகைகள் இருந்தது தெரியவந்தது. அதுதொடர்பாக விசாரணை செய்த போது, மேற்படி தங்க நகை பெட்டியை மோகன்ராஜ்(21), த/பெ.பழனிச்சாமி, மூணாம்பள்ளிபுதூர், குருமந்தூர், நம்பியூர் என்பவர் தவறவிட்டு சென்றுள்ளது தெரியவந்தது. அதனடிப்படையில் மோகன்ராஜை நிலையம் வரவழைத்து தவறவிட்ட நகை பெட்டி ஒப்படைக்கப்பட்டது. மேலும் நகை பெட்டியை நேர்மையாக எடுத்து கொடுத்த ஜெயகுமாரை நம்பியூர் காவல் ஆய்வாளர் பாராட்டினார்.

முதலமைச்சர் ஸ்டாலின் என் கனவு என் எதிர்காலம் என்ற இணைய தளத்தினை தொடங்கி வைத்ததை தொடர்ந்து,

# அமைச்சர் சு.முத்துசாமி ஆர்.என்.புதூர் பிளாட்டின மஹாலில் 2,025 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்



ஈரோடு மாவட்டம், ஆர்.என்.புதூர் பிளாட்டின மஹாலில் (04.02.2026) நேற்று வீட்டு வசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி 2,025 பயனாளிகளுக்கு ரூ.19,73,48,722/– மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

உங்களுடன் ஸ்டாலின் முகாம் தமிழ்நாடு முழுவதும் 10.000 முகாம்கள் 15.07.2025 முதல் 15.11.2025 வரை நடைபெற்றன. ஊரகப் பகுதிகளில் 15 துறைகள் 46 சேவைகள் வழங்கப்பட்டன. நகரப் பகுதிகளில் 13 துறைகள் 43 சேவைகள் வழங்கப்பட்டன.

ஈரோடு மாவட்டத்தில் சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 1,07,657 பயனாளிகளுக்கு மாதந்தோறும் உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. ஈரோடு மாவட்டத்தில் சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் நாளது வரை 95,427 பயனாளிகளுக்கு ரூ.1200/– மற்றும் 12,230 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.1500/– என மொத்தம் 1,07,657 பயனாளிகளுக்கு மாதந்தோறும் உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. தற்போது புதியதாக ஈரோடு மாவட்டத்தில் 4,973 பயனாளிகளுக்கு உதவித் தொகை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில், 3,798 பயனாளிகளுக்கு ரூ.1.200/– மற்றும் 1,175 பயனாளிகளுக்கு ரூ.1,500/–உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

நேற்றையதினம்,வீட்டு வசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் அவர்கள் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில் 1,564 பயனாளிகளுக்கு ரூ.16,26,39,500/– மதிப்பில் உதவிதொகை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறையின் சார்பில் 79 பயனாளிகளுக்கு ரூ.2,40,326/–மதிப்பில் பெண் குழந்தைகள் பாதுகாப்புத்திட்ட வைப்பு நிதி, தாட்கோ துறையின் சார்பில் 9 பயனாளிகளுக்கு .33,58,696/– மதிப்பில் கடனுதவி, மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 59 பயனாளிகளுக்கு ரூ.60,06,200/–மதிப்பீட்டிலும் இணைப்புசக்கரம் முதலமைச்சரின் விரிவான பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர், மருத்துவக்காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் 50 பயனாளிகளுக்கு .2,50,00,000/– மதிப்பில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக்காப்பீட்டுத் திட்ட அடையாள அட்டை, தொழிலாளர் துறையின் சார்பில் 53 பயனாளிகளுக்கு ரூ.1.04.000/– மதிப்பில் உதவித்தொகை, தொழிலாளர் நலத்துறையின் சார்பில் 47 பயனாளிகளுக்கு நல வாரிய பதிவு அட்டையினையும், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையின் சார்பில் 164 பயனாளிகளுக்கு புதிய மின்னணு குடும்ப அட்டைகளையும் என மொத்தம் 2,025 பயனாளிகளுக்கு ரூ.19,73,48,722/– மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சிகளின்போது, ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி. சந்திரகுமார், அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம், ஈரோடு மாநகராட்சி மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், துணை மேயர் வே.செல்வராஜ். ஈரோடு வருவாய் வட்டாட்சியர் முத்துகிருஷ்ணன், மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின் , உதவி ஆட்சியர் (பயிற்சி) காஞ்சன் சௌதரி, மண்டலக்குழுத்தலைவர் (1–ம் மண்டலம்) பி.கே.பழனிசாமி, தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) செல்வராஜ், உட்பட துறைசார்ந்த அலுவலர்கள் உடன் இருந்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விழுப்புரம் மாவட்டத்தில் நேற்று (04.02.2026) உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் 10,000 முகாம்கள் நலத்திட்டப் பயன்கள் மற்றும் 1.80 இலட்சம் புதிய பயனாளிகளுக்கு சமூக பாதுகாப்புத் திட்டப் பயன்கள் வழங்கியதைத் தொடர்ந்து ஈரோடு மாநகராட்சி, பிளாட்டினம் மஹாலில் வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி மாற்றுத்திறனாளி பயனாளிக்கு இணைப்புச்சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டரை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி ,சட்டமன்ற உறுப்பினர்கள் (ஈரோடு கிழக்கு) வி.சி.சந்திரகுமார், (அந்தியூர்) ஏ.ஜி.வெங்கடாச்சலம், ஈரோடு மாநகராட்சி மேயர் சு.நாகரத்தினம் சுப்பிரமணியம், மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்தகுமார், ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின் , உதவி ஆட்சியர் (பயிற்சி) காஞ்சன் சௌதரி , ஈரோடு மாநகராட்சி துணை மேயர் வே.செல்வராஜ், மண்டலக்குழுத்தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் உள்ளனர்.

# திருப்பதி லட்டு பிரசாத விவகாரம்: விசாரணை கமிஷன் அமைக்கிறது ஆந்திர அரசு



அமராவதி: திருப்பதி ஏழுமலையான் கோயிலில் நடைபெற்ற கலப்பட நெய் விவகாரம் தற்போது விஸ்வரூபம் எடுத்துள்ளது. இதில் உண்மையான குற்றவாளியை கண்டு பிடிக்க விசாரணை கமிஷனை அமைக்க ஆந்திர அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

கடந்த 2019–ம் ஆண்டு முதல் 2024–ம் ஆண்டு வரை திருமலை திருப்பதி தேவஸ்தானத்தில் கலப்பட நெய் உபயோகப்படுத்தி, பிரசாதம் தயாரிக்கப்பட்டதாக 2024–ல் சந்திர பாபு நாயுடு ஆட்சிக்கு வந்ததும் பகிரங்கமாக அறிவித்தார். ஜெகன் மோகன் ரெட்டியின் ஆட்சி காலத்தில் நடந்த இந்த மாபெரும் குற்றத்தை கண்டு பிடிக்க முதலில் ஆந்திர அரசு சிறப்பு புலனாய்வு குழுவை (எஸ் ஐடி) அமைத்தது.

ஆனால், இக்குழு பாரபட்சமாக விசாரணை நடத்தும் என்பதால் சிபிஐ விசாரணை தேவை என ஒய் எஸ்ஆர் காங்கிரஸார் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர். இதனை தொடர்ந்து சிபிஐ அதிகாரிகள் தலைமையில் சிறப்பு புலனாய்வு குழு அமைக்கப்பட்டது.

இந்த சிறப்பு புலனாய்வு குழு, இதுவரை 14 பேரை கைது செய்துள்ளது. இவர்கள் அனைவரையும் நெல்லூரில் உள்ள லஞ்ச ஒழிப்பு மற்றும் சிபிஐ நீதிமன்றங்களில் ஆஜர் படுத்தியது. இதில் பல் வேறு பால் உற்பத்தி நிறுவனத்தை சேர்ந்தவர்கள் உள்ளனர். மேலும், ஏ –34 குற்றவாளியாக திருப்பதி தேவஸ்தான அதிகாரியான விஜய பாஸ்கர் ரெட்டி கைது செய்யப்பட்டார்.

அப்போது அவர் புலனாய்வு குழுவுக்கு கொடுத்த வாக்கு மூலத்தில், "கலப்படம் செய்த நெய்யை பரிசோதனை செய்ததும் அதில் கலப்படம் உள்ளது என்பதை அறிந்தேன். இதனை அந்தந்த நிறுவனங்களுக்கு எடுத்துக் கூறினேன் . ஆனால், அவர்கள், எனக்கு லஞ்சம் கொடுத்து நெய்யை தொடர்ச்சியாக விநியோகம் செய்து வந்தனர். இதன் மூலம் திருமலை திருப்பதி தேவஸ்தானத்துக்கு ரூ.118 கோடி நஷ்டம் ஏற்பட்டது. 2023–ல் போலே பாபா நெய் நிறுவனத்தில் இருந்து ரூ.75 லட்சம், பிரீமியர் நிறுவனத்தில் இருந்து ரூ. 8 லட்சமும் லஞ்சமாக வாங்கினேன்" என வாக்கு மூலம் அளித்தார்.

இதைத் தொடர்ந்து குற்றப்பத்திரிக்கையும் தாக்கல் செய்யப்பட்டது. இதனிடையே, தேவஸ்தான நிர்வாக அதிகாரியாக இருந்த அனில்குமார் சிங்காலை ஆந்திர அரசு அப்பதவியில் இருந்து நீக்கி அவருக்கு பதிலாக சீனியர் ஐஏஎஸ் அதிகாரி ரவிச் சந்திராவை நியமனம் செய்துள்ளது. ஆனால், ஜவஹர் ரெட்டி, தர்மா ரெட்டி ஆகியோர் மீது ஆந்திர அரசு எவ்வித நடவடிக்கைகளையும் இதுவரை எடுக்கவில்லை. மேலும், அப்போதைய அறங்காவலர் குழுக்கள் மீது எவ்வித நடவடிக்கைகளும் இதுவரை இல்லை.

இது தற்போது ஆந்திர அரசியலில் பெரும் அரசியல் புயலை வீச தொடங்கி உள்ளது. இந்நிலையில், நேற்று அமராவதியில் முதல்வர் சந்திரபாபு நாயுடு தலைமையில் நடைபெற்ற அமைச்சரவை குழுவில், கலப்பட நெய் விவகாரம் குறித்து சரிவர புலனாய்வு விசாரணை நடக்கவில்லை என்பதால், உண்மையான குற்றவாளி யார் என விசாரிக்க விரைவில் விசாரணை கமிஷன் அமைக்க ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதையடுத்து, ஆந்திர அரசியலில் கலப்பட நெய் விவகாரம் பூதாகரமாகி மீண்டும் விஸ்வரூபம் எடுத்துள்ளது. இதன் மூலம் பல பெரிய தலைகள் சிக்கும் என அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# தூத்துக்குடியில் நடிகர் எஸ்.டி.ஆர். சிலம்பரசன் பிறந்தநாள் விழாவை நல்லாயன் செவித்திறன் குறையுடைடையோர் லூத்தரன் பள்ளி மாணவர்களுடன் கொண்டாடினர்



தூத்துக்குடியில் நடிகர் எஸ்.டி.ஆர் சிலம்பரசன் பிறந்தநாளை முன்னிட்டு தூத்துக்குடி பிரையன்ட் நகரிலுள்ள நல்லாயன் செவித்திறன் குறையுடையோர் லூத்தரன் பள்ளி மாணவர்களுடன் நடிகர் எஸ்.டி.ஆர்.சிலம்பரசன் பிறந்தநாள் விழா சிறப்பாக கொண்டாடினர்.

இதில் தூத்துக்குடி மாவட்ட இலட்சிய திமுக பொறுப்பாளர் சிம்பு கண்ணன் தலைமை தாங்கினார். தூத்துக்குடி மாவட்ட எஸ்.டி.ஆர் தொண்டர்அணிமாவட்ட தலைவர் எஸ்.டி.ஆர் முத்து முன்னிலைவகித்தார்.

நடிகர் எஸ்.டி.ஆர் சிலம்பரசனுக்கு பிறந்தநாள் விழாவை முன்னிட்டு சிறப்பு பிராத்தனை செய்த மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு இனிப்புகளுடன் நோட்டு, புக், பென்சில், பேனா போன்ற கல்வி உபகரங்கள் இனிப்பு வழங்கி கொண்டாடினர். இதைப் பெற்றுக்கொண்ட மாணவர்கள் அனைவரும் நன்றி தெரிவித்தனர். நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளர்களாக எஸ்.டி.ஆர் மாவட்ட ரசிகர் மன்ற செயலாளர் நட்ராஜ், பொருளாளர் சிம்பு செல்வம் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து எஸ்.டி.ஆர் தொண்டர் அணி சார்பில் ஏழைகளுக்கு உணவு வழங்கப்பட்டது. பொதுமக்கள் அனைவருக்கும் மரக்கன்றுகளையும் வழங்கினர். இந்த விழா ஏற்பாடுகளை அனைத்தும் தூத்துக்குடி மாவட்ட எஸ்.டி.ஆர் தொண்டர் அணியினர் சிறப்பாக செய்திருந்தனர்.

விழாவில் சஞ்சய், பாலமுருகன், இசால், அர்ஜுன், ராம் குமார், ஐயப்பன், அஜய் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# ஊரக வாழ்வாதாரத்துறை சார்பில் போராடும் பெண்கள் மீது காவல்துறை நடத்திய அடக்குமுறைகளுக்கு முதல்வரும், துணை முதல்வரும் மன்னிப்பு கேட்க வேண்டும்

## த.வெ.க.வின் இணை பொதுசெயலாளர் நிர்மல் குமார் பேட்டி



சென்னையில் ஊரக வாழ்வாதாரத்துறை சார்பில் ஊதிய உயர்வு கேட்டு 2500க்கும் மேற்பட்ட பெண்கள் போராடிவரும் நிலையில் கடந்த மூன்று நாட்களாக தமிழக காவல்துறையினரால் மிகப்பெரிய அடக்குமுறைக்கு ஆளாக்கப்படுகின்றனர். நுங்கம்பாக்கம் அசிஸ்டன்ட் கமிஷனர் அவர்களை நீங்கள் ஊர்மேய வந்திர்களா என அசிங்கமாக பேசுகிறார். வாழ்வாதாரத்துக்காக போராடும் அவர்களை கூப்பிட்டு பேசக்கூட இந்த அரசு முன்வரவில்லை பிறப்பால் துணைமுதல்வரான உதயநிதி ஸ்டாலின்

உங்களுக்கு அரசு செலவில் 5 ஸ்டார் போல் குறிஞ்சி இல்லம் உள்ளது. ஆனால் அந்த இல்லத்தில் மக்கள் சந்திப்பு நடத்த தான் இல்லம் என்று உங்களுக்கு தெரியுமா கேளிக்கை விடுதி நடத்த இல்லை கொஞ்சம் கூட வெட்கம் இல்லாமல் தினமும் நாயுடன் விளையாடி புகைப்படம் போடுகிறீர்கள். உங்கள் துறையில் பாதிக்கப்படும் பெண்களை சந்திக்க ஐந்து நிமிடம் இல்லையா? பொய்யான வாக்குறுதி குறித்து எல்லா திறப்பு மக்களையும் திமுக அரசியல் ஏமாற்றியது அமைதியாக போராட மக்களை எப்படி கையாள வேண்டும் என அதிகாரிகளுக்கு தெரியவில்லை. இன்னும் இரண்டு மாதம் தான் உள்ளது உதயநிதி அவர் வளர்க்கும் நாயை கூப்பிட்டு விட்டு குறிஞ்சி நிலத்திலிருந்து கிளம்பி விடுவார்.

பெண்களிடம் தவறாக பேசி அதிகாரியின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் முதல்வரும் துணை முதல்வரும் வருத்தப்பட்டு பாதிக்கப்பட்ட பெண்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டும் என்பது எங்கள் கோரிக்கை. தலைவர் சார்பில் நாங்கள் அனைவரும் அவருடன் ஒரு உறுதுணையாக இருப்போம். அண்ணா நகர் சிறுமி போக்சோ வழக்கில் பாதிக்கப்பட்டது இதுவரை நடவடிக்கை இல்லை முதல்வர் மாற்றிக்கொள்ள வேண்டும்.

அதிமுக ஊழல் கட்சி ஆனால் ஜெயலலிதா ரோல் மாடல் என்கிறார் என எடப்பாடி கூரியர் குறித்த கேள்விக்கு:

புரட்சித்தலைவரும் புரட்சித் தலைவர் அம்மாவும் சரி திமுக கட்சியால் அவரை ஒரு வருடம் அலுவலகத்துக்கும் வரவிடாமல் ஒடுக்கினார்கள். அம்மா மீதான வழக்குகளில் பலவழக்கு தவறாக கையாளப்பட்டிருக்கலாம் வீட்டில் இருந்தவர்கள் தேர்தலை பயன்படுத்தி தவறாக கையாளப்பட்டு இருக்கலாம். மனசாட்சியைப் பொதுவாக அம்மா எந்த தவறும் செய்யவில்லை என்பது மக்கள் கருத்து.

அதிமுக இரண்டாம் கட்ட தேர்தல் அறிவிப்புகள் எப்படி பார்க்கிறீர்கள் குறித்த கேள்விக்கு: அவரவர்கள் என்ன வாக்குறுதிகள் வேண்டாம் அள்ளி வீசலாம் வாக்குறுதிகளை யார் நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கையை யார் கொடுக்கிறார் என்று பார்க்க வேண்டும் இதுவரை திமுக கொடுத்த வாக்குறுதி என்ன நிறைவேற்றினார்கள். வாக்குறுதிகளை நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கை மக்களுக்கு இல்லை. நாங்கள் கொடுக்கும் வாக்கை மக்கள் 100 சதவீதம் நிறைவேற்றுவார்கள். தவெக வாக்குறுதிகள் தயாராகி வருகிறது விரைவில் அறிவிப்புகள் வரும் இவர்களைப் போல் போற போக்கில் தெளித்துவிட்டு போக முடியாது. ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளான செங்கோட்டையனை வைத்துவிட்டு எங்களை குறை கூறுகிறார் என்று எடப்பாடி கூறியது குறித்த கேள்விக்கு:

தவெகாவின் இன்ஜின் ஓட்டை இஞ்சின் என அண்ணாமலை கூறி அது கொடுத்த கேள்விக்கு: அண்ணாமலை ஒவ்வொரு நாளும் ஒவ்வொன்று பேசுவார். ஒன்றரை வருடங்களுக்கு முன்பு தவழ்ந்து காலில் விழுந்து தற்குறி பழனிசாமி என்று பேசினார். இன்று அவரே போய் ஒரே வருஷத்தில் அண்ணன் பழனிசாமியின் கீழ் அவரை முதல்வராக்க பாடுபடுவேன் என்று சொல்வது பொது வாழ்வில் இப்படி ஒரு கேவலமான நபர் பற்றி நாம் பேச வேண்டியது இல்லை என்பது என்னுடைய தாழ்மையான கருத்து.

தேர்தல் பிரச்சாரங்கள் எப்போது தொடங்கப்படும் குறித்த கேள்விக்கு: காவல்துறை தரப்பில் இன்னும் அனுமதி மட்டும் பெண்டிங் அனுமதி வந்தவுடன் விரைவில் அறிவிப்போம். தவெக தலைவர் விஜயின் தேர்தல் பிரச்சாரத்தை விரைவில் எதிர்பார்க்கலாம் என்றார்.

கூட்டணிக்கு எந்தெந்த கட்சிகள் பேச்சுவார்த்தைக்கு இதுவரை வந்துள்ளன குறித்த கேள்விக்கு: அது எல்லாம் எங்கள் தலைவர் பார்த்துக் கொள்வார் என்று சொல்லிவிட்டு புறப்பட்டார்.

# வேப்பூரில் பாமக மகளிர் பூத் கமிட்டி ஆலோசனைக் கூட்டம் மாவட்ட செயலாளர் இ.கே.சுரேஷ் பங்கேற்பு



கடலூர் மாவட்டம் வேப்பூரில் பாட்டாளி மக்கள் கட்சியின் நல்லூர் மேற்கு ஒன்றிய மகளிர் பூத் கமிட்டி செயல்வீரர்கள் ஆலோசனைக் கூட்டம் நேற்று பிப்ரவரி 4, புதன்கிழமை ஒன்றிய செயலாளர் திலீப் குமார் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கடலூர் மேற்கு மாவட்ட செயலாளர் இ.கே. சுரேஷ் சிறப்பு அழைப்பாளராகக் கலந்துகொண்டு, எதிர்வரும் தேர்தலை முன்னிட்டு வாக்குச்சாவடி முகவர்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து விரிவான ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்விற்கு மாநில வழக்கறிஞர் பேரவை துணைத்தலைவர் தனபாண்டியன், மாநில மகளிர் சங்க துணை செயலாளர் ஞானசுந்தரி ஆகியோர் முன்னிலை வகிக்க, தொகுதி அமைப்புச் செயலாளர் குழந்தைவேலு வரவேற்புரையாற்றினார்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் விருத்தாச்சலம் தெற்கு ஒன்றிய செயலாளர் சுப சக்திவேல், மங்களூர் மேற்கு ஒன்றிய செயலாளர் புல்லட் வேல்முருகன், விருத்தாச்சலம் நகர செயலாளர் பில்லா மணி, நகர வன்னியர் சங்க செயலாளர் சேதுபதி, மாவட்ட ஊடகப் பேரவை தலைவர் ரவி சரண்ராஜ், மாவட்ட ஊடக பேரவை செயலாளர் செழியன், மாவட்ட தேர்தல் பணி குழு துணை தலைவர் நாராயணன்,

மாவட்டத் துணைத் தலைவர்கள் துரை, சின்னையன், மாவட்ட இளைஞர் சங்கத் துணைத் தலைவர் தமிழ்ச்செல்வன், துணைச் செயலாளர் ராஜசேகர், மாவட்ட அமைப்பு செயலாளர் மதியழகன், மாவட்ட கொள்கை விளக்க அணி தலைவர் சுரேஷ் உள்ளிட்ட கட்சியின் முக்கிய நிர்வாகிகளும், திரளான மகளிரணி நிர்வாகிகளும் பங்கேற்று சிறப்பித்தனர்.

Printed by,Hiwins Printers,Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at ERODE, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.